இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 7.10.2026

தேர்தல் சதிகளும் சந்தேகத்துக்குரிய முடிவுகளும்!

"SIR நடவடிக்கைக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து முதலமைச்சர்களும் சட்டவிரோதமானவர்கள்" என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சொல்லி இருக்கிறார்.

"வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் திருத்தம் என்ற பெயரால் செய்யப்பட்ட SIR நடவடிக்கைகள் அனைத்தும் ஜனநாயகத்தைக் குலைக்க நடத்தப் பட்டவை. அதேபோல் தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது நடந்து முடிந்த அனைத்துத் தேர்தல்களும் சட்டவிரோதமானவை. மக்களவை, மாநில சட்டப்பேரவைகளைக் கலைக்க வேண்டும்" என்றும் மல்லிகார்ஜுன கார்க்கே சொல்லி இருக்கிறார்.

சில நாட்களுக்கு முன் உத்தவ் தாக்கரே சொன்னார்: **"மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும்"** என்று!

இந்திய ஜனநாயகத் தேர்தல் முறையின் இருண்ட பக்கங்களை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் முகம் காட்டு கிறது. தன்னோடு பணியாற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களுக்கே தெரியாமல் ஞானேஷ்குமார் தன் விருப்பத்துக்கு பல்வேறு சதிச்செயல் களைப் புகுத்தி தேர்தல் முறையைக் கையாண்டு வந்துள்ளார் என்பது தினந்தோறும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டு இருக்கிறது.

பத்து மாதத்தில் 14 முறை தலைமைத் தேர்தல் அதிகாரி ஞானேஷ் குமாருக்கு நாங்கள் சொல்லிய ஆலோசனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன என்று மற்ற இரு தேர்தல் ஆணையர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

"நீதிமன்றமே தலையிட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கச் சொன்ன பிறகும், அவர்களது பெயர்களைச் சேர்ப்பதற்கு எதிராக மேல்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. யார் இதனைச் செய்தது? அதுகுறித்து கூட எங்களுக்குத் தெரியவில்லை. சட்டப்படி வாக்காளர் பட்டியலில் திருத்தங்களைச் சரிபார்த்து மேற்கொள்ள ERO எனப்படும் வாக்காளர் பதிவு அலுவலர் களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், தகுதியுள்ள வாக்காளர்களாக அங்கீக ரிக்கப்பட்டவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் அவர்களால் சேர்க்க முடியவில்லை. அதைச் செய்வதற்கான ERONet வலைதளம் முற்றிலுமாக ஒருவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. எங்களால் கூட அதனை அணுக முடிய வில்லை" என இரண்டு தேர்தல் ஆணையர்களும் தெரிவித்துள்ளார்கள் என்றால், ஞானேஷ்குமார் காலத்தில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்தும் எப்படி ஜனநாயகத் தேர்தல்களாக இருந்திருக்க முடியும்? இவை எதற்கும் ஞானேஷ்குமாரால் முறையான பதிலைச் சொல்ல முடிய வில்லை.

ஞானேஷ்குமாரை பதவி விலகச் சொல்லி நாளுக்கு நாள் போராட்டம் அதிகம் ஆகி வருகிறது. அரசியல் கட்சிகள் மட்டுமல்ல இளைஞர்கள், மாணவர்கள் போராட்டம் தொடங்கி இருக்கிறார்கள். 'நீட்' தேர்வுக்கு எதிராகப் போராடி அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி விலக வைத்த கரப்பான் பூச்சி ஜனதா கட்சி களத்தில் குதித்துள்ளது. இடதுசாரி மாணவர்கள் இந்தியா முழுவதும் இதே போன்ற போராட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் 'பிசினஸ் லைன்' பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரை பல்வேறு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்நாட்டில் செய்யப்பட்ட SIR நடவடிக்கைகள்தான் தமிழ்நாட்டின் தேர்தல் முடிவை மாற்றியது என்கிறது அந்தப் பத்திரிகை.

SIR மூலம் அதிகளவில் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்ட தொகுதி களில்தான் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இருக்கிறது. குறைந்த அளவு வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் தி.மு.க.வும், அதிகளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் அதிகளவில் த.வெ.க.வும் வெற்றி பெற்றுள்ளது என்கிறது இப்பத்திரிகை.

80 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்ட 10 தொகுதிகளில் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும், 50 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 22 தொகுதிகளில் 18 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும் சொல்கிறது.

30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 37 இடங்களில் 24 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது.

20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 66 இடங்களில் 32 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது.

அதாவது SIR நடவடிக்கைகள்தான் தேர்தல் முடிவுகளை மாற்றி இருக்கிறது என்று சொல்கிறது 'பிசினஸ் லைன்'.

10 ஆயிரத்துக்கும் குறைவாக வாக்காளர்கள் நீக்கப்பட்ட 19 தொகுதி களில் இரண்டில் மட்டுமே த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது.

இதை வைத்துப் பார்க்கும் போது, SIR மூலம் அதிகளவில் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்ட தொகுதிகளில் த.வெ.க. வெற்றி பெற்றிருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

SIR பணிகளுக்குப் பிறகு தேர்தலை எதிர்கொண்ட மாநிலங்களில் முடிவுகள் சந்தேகத்தை அதிகரிக்கும் விதமாக அமைந்துள்ளதைத் தான் தினந்தோறும் வெளியாகும் தகவல்கள் உறுதி செய்து வருகின்றன. கார்கே, உத்தவ் தாக்கரே சொல்வது சரியானதே!

வாக்காளர் பட்டியல் முறைகேடு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு என இரண்டு விதமான முறைகேடுகள் நடந்துள்ளன. SIR மூலம் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களே மோசடியானவை. அதனடிப்படையில் நடந்த தேர்தல்களும் மோசடியானவையே!

●●

துவரம் பருப்பு கொள்முதலில் கழக அரசின் மீது தவறான குற்றச்சாட்டு:

த.வெ.க. ஆட்சியில் பாமாயில் கொள்முதலில் ரூ.600 கோடி ஊழல்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.7 -

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

கழக ஆட்சியில் கிலோ ரூ.109 கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பை இந்தக் கோமாளி அரசு, ரூ.77.89க்கு வாங்கியுள்ள தாகவும், இதனால் இந்த ஆட்சியில் கொள் முதல் விலை ரூ.31 வரை குறைந்து, அரசுக்கு 750 கோடி மிச்சமாகும் என்றும், அரைகுறை யாகவும், உண்மைகளை மறைத்தும் வெளி யிடப்பட்டுள்ள ஓர் செய்தியை ஆளுங்கட்சி யின் Toolkits பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய விலைக் குறைப்புக்குக் கார ணம், இந்த Circus சர்க்கார் அல்ல கழக அரசு தான் என்பதே நிதர்சனமான உண்மை.

2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம் பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படியாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது கழக அரசு.

இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, இந்த ஆட்சியில் தான் குறைந்த விலைக்கு



துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று கழகத்தின் மீது அவதூறு பரப்புவதை ஏற்க முடியாது.

அதுமட்டுமல்ல, ரேஷன் கடைகளில் வழங் கப்படும் பாமாயில், கழக ஆட்சியில் சென் றாண்டு செப்டம்பரில் லிட்டர் ரூ.124.90க்கும், டிசம்பரில் ரூ.121.95க்கும், கடந்த மார்ச் மாதத்தில் ரூ.136.95க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

ஆனால், இந்த Circus ஆட்சியில் கடந்த ஜூன் மாதத்தில் ரூ.154.99க்கும், தற்போது ரூ.148க்கும் அதிக விலை கொடுத்து கொள் முதல் செய்துள்ளனர்.

கழக ஆட்சியில் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்ட பாமாயிலை, கடந்த 3 மாதங்களில், லிட்டருக்கு ரூ.11 அதிகம் கொடுத்து இந்த ஆட்சியில் வாங்குகிறார்கள் என்றால், சுமார் ரூ.600 கோடிக்கு மேல் ஊழல் நடந்து இருக்கிறது என்று தானே அர்த்தம்.

Abusive Warriors தான் உண்மையிடம் இருந்து தூரத்தில் நிற்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியில் சில ஊடகங்களும் Fanboy type Sofa Ecosystemல் சிக்கி நிற்பது ஏன்?

அவதூறு பரப்புவதை நிறுத்தி விட்டு, விலைவாசி உயர்வால் அன்றாடம் அல்லல் படும் மக்களின் துயர் துடைக்க இந்த ஆட்சி யாளர்கள் முன் வர வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

கூட்டணியில் இருப்பவர்களே த.வெ.க.வை விமர்சிக்கும் நிலை!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

தூத்துக்குடி, அக். 7 -

கூட்டணியில் இருக்கக் கூடியவர் களே த.வெ.க.வை விமர்சிக்கும் நிலை உள்ளது என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கூறினார்.

தூத்துக்குடி விமான நிலையத் தில் தி.மு.க. துணைப் பொதுச் செய லாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. நேற்று அளித்த பேட்டி வருமாறு : -

இடைத்தேர்தலில் நிச்சயமாக, நியாயத்திற்கு ஒரு வெற்றியையும், மக்களை ஏமாற்றி ஜனநாயகத் தைப் படுகுழியில் தள்ளக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கக் கூடிய த.வெ.க.விற்கு ஒரு பாடம் சொல்லித் தரக்கூடிய அளவிற்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன்.



அவர்களுடைய கூட்டணியில் இருக்கக் கூடியவர்களே த.வெ.க.வை பற்றி விமர்சனம் செய்யக்கூடிய அளவிற்கு, அவர்கள் நேர்மையான, தூய சக்தி ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் எந்தத் தவறும் செய்யப் போவ தில்லை, செய்ய மாட்டோம் என்று தொடர்ந்து பெருமையாக மேடைக்கு மேடை பேசினால் போதாது. உண்மையிலேயே அப்படி இருக்க வேண்டும். த.வெ.க. ஆட்சியில் மக்களுக்கு எந்த நன்மை யும் செய்யவில்லை, பாதுகாப்பு இல்லை, குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டிருக் கிறது. இதனால் மக்கள் ஒரு அச்சத்தோடேயே வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவித வளர்ச்சிக்கான திட்டங் களும் கிடையாது, தொழில் முதலீடு கள் கிடையாது. இதில் மக்களை ஏமாற்றி, நாங்கள் தூய சக்தி என்று சொல்லி வருகிறார்கள். அதே வேளை மக்களுக்கு பணப்பட்டு வாடா செய்வதற்குப் பணம் எங்கி ருந்து வருகிறது.

இப்படிப்பட்டவர்களுடைய உண்மையான முகத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சட்ட மன்ற பொதுத் தேர்தலுக்கே அதிக மாக பிரசாரம் செய்யாத ஒரு முதல மைச்சர், இடைத்தேர்தலில் தெருத் தெருவாகப் போய் பிரசாரம் செய்தி ருக்கிறார் என்றால், தம்பி விஜய் அவர்களுக்கு நிச்சயமாக தேர்த லில் ஒரு பயம் இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. தி.மு.க. தலைவர் யாருடைய மன மும் புண்படும் வகையில் பேசக் கூடியவர் இல்லை.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கூறினார்.

அனைத்து வேட்பாளர்களும் போட்டியாளர்கள்தான்!

மதுராந்தகம் தொகுதியில் தி.மு.க.தான் வெற்றி பெறும்!

கழக வேட்பாளர் இ.பரந்தாமன் பேட்டி!

மதுராந்தகம், அக். 7 -

மதுராந்தகம் தொகுதியில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் ஆய்வுக்குப் பின் செய்தியாளர் களிடம் அளித்த பேட்டி வருமாறு:-

நாங்கள்தான் நம்பர் 1. நாங்கள்தான் ஜெயிப் போம். மற்றவர்கள் இரண் டாவது இடத்தை வாங்கு கிறார்கள்.

மக்கள்தான் எஜமானர் கள். நான் சந்திக்கக் கூடிய இடங்களில் மக்களுடைய முகமலர்ச்சி. என்னை பார்க்கும்போது கை கொடுக்கிறாங்க. ஆரவா ரமா சொல்றாங்க. சந்தோ ஷமா போங்க. தைரியமா போங்க. மகிழ்ச்சியோடு போங்கன்னு எங்களிடம் சொல்றாங்க. மக்கள் சொல்கிற மொழியைதான் என்னால் சொல்ல முடியும். அந்த வேட்பாளருடைய மொழியை நான் சொல்ல முடியாது.

இந்த தேர்தலில், இடைத்தேர்தல் என்றாலே ஆளுங்கட்சிக்கு சாதகம் என்பது இந்தத் தேர்தலில் கிடையாது. இது வரலாற் றில் வந்து பழைய வரலாறு களை மறுபடியும் புதுப் பிக்கும். ADMK ஆட்சியில் இருக்கும் போது திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற வரலாறு இருக்கிறது. மீண்டும் மது ராந்தகம் அந்த வரலாற் றைப் படைக்கும். வாக்குப் பதிவில் முறைகேடு இருக் கிறதா என்று கேட்கிறார்கள்.



அந்த மாதிரி ஏதாவது கம்ப்ளைண்ட் ஏதாவது இருந்தால் உங்களுக்கே தெரிந்திருக்கும். நான் போகின்ற இடங்கள் எல் லாம் வந்து அமைதியா வாக்குப்பதிவு நடந்து தான் இருக்கிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் எப்ப வுமே வாக்குப்பதிவு அமை தியா நடக்கக்கூடிய இடங் கள்தான். அப்படி ஏதாவது இருந்தது என்றால் உங்களு டைய கவனத்துக்கு வரும்.

கேள்வி : - *மதுராந்தகம் தொகுதியில் தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டால் நான் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்றேன்னு சொல்லிட்டு அதை வச்சு ஒரு பெரிய விமர்சனம் செய்திருக்கிறாரே ஆதவ் அர்ஜுனா.*

பதில் : - *ரெடியா ராஜினாமா கடிதத்தை வைக்க சொல்லுங்க.*

கேள்வி:- *கடந்த தேர் தல்ல ADMK win செய்த தொகுதி. இப்போது உங்க ளுக்கு களத்தில் போட் டியா யாரு?*

பதில்:- *களத்தில் நிக்கிற எல்லா வேட்பாளர்களும் போட்டியாளர்கள்தான்.*

இது அஞ்சு முனை போட்டி. நீங்கள் வச்சுக்க லாம் என அரசியல் கட்சி கள் நினைக்கிறது. அதை தாண்டி பல சுயேட்சைகள் இருக்கிறார்கள். போட்டி யில் களத்தில் இருக்கிற எல் லாருமே போட்டிதான். வெற்றி பெறக்கூடிய நிலை யில் இருக்கக்கூடிய கட்சி கள் அப்படின்னு பார்க்கும் போது அரசியல் கட்சிகள் பிரதானமாக இருக்கும்.

கேள்வி: - *வாக்குப் பதிவு எப்படி நடந்துக்கிட்டு இருக்கிறது?*

பதில்:- *இப்போது வரைக் கும் பிரச்சினை இல்லாமல் போய்க்கிட்டு இருக்கிறது. காவல்துறையும் சரி, தேர் தல் ஆணையமும் சரி, இங்கு பணியாற்றுகின்ற பணியாளர்களும் சரி, ஏதாவது சில technical error இருக்கிறது. காலையில் எங்கள் கவனத்துக்கு கொண்டு வந்தார்கள். முறையா ஆர்வம் காட்ட சொன்னோம். அதுவும் rectify ஆயிடுச்சு.*

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வாக்கு செலுத்தி, ஜனநாயக கடமையாற்றினார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா தளவாய்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் தனது வாக்கை செலுத்தி ஜனநாயக கடமையாற்றினார்.